


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.08.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.17,616 கோடி முதலீட்டில் 64,968 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 19 தொழில் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, ஓம்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டகுடோ இவானகா, செயிண்ட் கோபைன் (ஆசிய–பசிபிக்) நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் பி.சந்தானம், CII–தமிழ்நாடு அமைப்பின் தலைவர் ஸ்ரீவட்ஸ் ராம், செம்ப்கார்ப் நிறுவனத்தின் தெற்காசிய தலைமைச் செயல் அலுவலர் விபுல் துலி, கிரீன்கோ குழுமத்தின் தலைவர் மகேஷ், முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், அயல்நாட்டு தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.08.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், டிட்கோ மற்றும் டாடா டெக்னாலஜீஸ் ஆகிய நிறுவனங்கள் கூட்டாக இணைந்து, தமிழ்நாடு பொறியியல் மற்றும் புத்தாக்க மையம் (TN ENGINE) என்ற ஒரு பொது பொறியியல் வசதி மையத்தை தொடங்கிடும் வகையில், கோயம்புத்தூர் – அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மொத்தம் ரூ.400 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்திற்கு, அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஓம்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டகுடோ இவானகா, செயிண்ட் கோபைன் (ஆசிய–பசிபிக்) நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் பி.சந்தானம், CII–தமிழ்நாடு அமைப்பின் தலைவர் ஸ்ரீவட்ஸ் ராம், செம்ப்கார்ப் நிறுவனத்தின் தெற்காசிய தலைமைச் செயல் அலுவலர் விபுல் துலி, கிரீன்கோ குழுமத்தின் தலைவர் மகேஷ், முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், அயல்நாட்டு தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பெண்கள் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

மூன்றாண்டுகளாக தமிழ்நாட்டில் உருவாகி வருகிறது.

**புதிதாக தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டுக்கு அழைத்து வாருங்கள்!**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

உங்களுக்கு என் அன்பான வேண்டுகோள் என்னவென்றால், நீங்கள் தொழில் நிறுவனங்களை தொடங்கினால் மட்டும் போதாது; உங்களைப் போன்று இருக்கின்ற மற்ற தொழில் நிறுவனங்களையும் தமிழ்நாட்டிற்கு அழைத்து வாருங்கள்... தொழில் தொடங்க வையுங்கள்...

தமிழ்நாடு அரசின் தொழில்துறை தூதுவர்களாக நீங்கள் எல்லோரும் மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, இந்த மூன்று ஆண்டுகளில், எண்ணற்ற தொழில் திட்டங்களை தமிழ்நாடு ஈர்த்திருக்கிறது. அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களையும் ஈர்த்து, அதன்மூலமாக, 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற தமிழ்நாட்டின் இலக்கை அடைவதற்காக நம்முடைய அரசு முனைப்போடு செயலாற்றி வருகிறது.

இந்த இருமுனை முயற்சி, இப்போது சாதகமான பலன்களை தந்து வருகிறது. இன்றைய தினம் பல்வேறு வகையான திட்டங்களை தொடங்கி வைத்திருக்கிறேன்.

- ★ மோட்டார் வாகனங்கள்,
- ★ பொது உற்பத்தி,
- ★ தொழிற் பூங்காக்கள்,
- ★ மின்னணுவியல்,
- ★ மருத்துவ உபகரணங்கள்,
- ★ தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்பச் சேவைகள்,
- ★ உணவு பதப்படுத்துதல்,
- ★ ரசாயனங்கள்,
- ★ ஜவுளி மற்றும் ஆடைகள்,
- ★ உயிர் அறிவியல்,
- ★ பசுமை ஹைட்ரஜன்
- ★ கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது.

இதன்மூலம் 1 லட்சத்து 6 ஆயிரத்து 803 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட இருக்கிறது. இதில் சிறப்பம்சம் என்னவென்றால், இதில் பெருமளவிலான வேலைவாய்ப்புகள் பெண்களுக்கானவை!

பெண்கள் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்து வருகின்ற நம்முடைய அரசின் நடவடிக்கைகளுக்கு இந்த சாதனை மேலும் ஊக்கமளிக்கிறது.

அனைத்துத் துறை வளர்ச்சி; அனைத்து சமூக வளர்ச்சி; அனைத்து மாவட்ட வளர்ச்சி; என்று நான் சொல்லி வருவதன் அடையாளம் இவைதான்!

தமிழ்நாடு முழுவதும் பரவலான மற்றும் நிலைக்கத்தக்க வளர்ச்சியை உறுதி செய்வதில் நம்முடைய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

### உலக முதலீட்டாளர்கள் விரும்பும் மாநிலம் தமிழ்நாடு!

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொழில் திட்டங்கள் தொடங்கப்படுவதால், அந்த மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே வேலைவாய்ப்புகள் பெருமளவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், அந்தப் பகுதிகள் உறுதியாக சமூக, பொருளாதார வளர்ச்சி பெறும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு!**

திறன்மிகு தொழிலாளர்கள் உள்ள மாநிலம், இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் கொண்ட மாநிலம் என்று பல்வேறு சிறப்பம்சங்களை தமிழ்நாடு கொண்டிருக்கிறது. மாநிலத்தில் பெண்களின் கல்வியறிவும், வேலைவாய்ப்பு விகிதமும், நாட்டின் சராசரியைவிட அதிகமாக இருக்கிறது. நாட்டிலேயே பெண்களுக்கான மிகவும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்று உலகம் முழுவதும் தெரியும்.

உட்கட்டமைப்பு தொடர்பான தொழில் துறை வளர்ச்சி, வணிகம் செய்வதை எளிதாக்குவது, சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் வாழ்க்கை வசதிகளை எளிதாக்குவது, இவையெல்லாம் அரசின் குறிக்கோள்கள். இதை செயல்படுத்துவதற்காகதான் எங்களுடைய கடமையாக கருதுகிறோம்!

உலகம் எங்கும் இருக்கும் முதலீட்டாளர்கள் விருப்பத்தோடு தேர்வு செய்யும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்பதற்கு இன்றைய நிகழ்வே ஒரு எடுத்துக்காட்டு!

130க்கும் மேற்பட்ட 'ஃபார்ச்சூன் 500' நிறுவனங்கள் தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்துள்ளதும், தமிழ்நாட்டின் முதலீட்டு ஈர்ப்புத் திறனுக்கு அத்தாட்சியாக விளங்குகிறது.

மிகுந்த திறமையும், படைப்பாற்றலும் கொண்டவர்கள், தமிழ்நாட்டின் துடிப்பான இளைஞர்கள்! நம்முடைய இளைஞர்கள் இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பல்வேறு துறைகளில், பல்வேறு வகைகளில் சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, எங்கள் இளைஞர்களின் திறன்களை நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று முதலீட்டாளர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**அனைத்துத் திட்டங்களுக்கும் அரசு முழு ஆதரவளிக்கும்!**

இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்ட மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பாக என்னுடைய வாழ்த்துகளை தெரிவிப்பதோடு, ஒவ்வொரு திட்டத்தின் சுமுகமான செயல்பாட்டுக்கும் சாதகமான சூழலை உருவாக்குவதில் தமிழ்நாடு அரசு மனப்பூர்வமான ஆதரவளிக்கும் என்று உறுதியளித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# 'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சான்றிதழை வழங்கினார்!

திருப்பூர், ஆக. 22 - ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் என் உயிரினும் மேலான.../. கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகள் கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சி பாளையத்தில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் முதற்கட்ட போட்டிகள் என்றென்றும் பெரியார் ஏன்? அண்ணா கண்ட மாநில சுயாட்சி, கலைஞரின் தொலை நோக்குப் பார்வை, கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி, இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம், சமூக நீதி காவலர் கலைஞர், தமிழ் நாட்டு குடும்பங்களில் தி.மு.க., பேசி வென்ற இயக்கம், திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆகிய 10 தலைப்புகளில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் 18 வயது முதல் 35 வயதுடைய 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். போட்டிகளின் நடுவர்களாக கம்பம் செல்வேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, குத்தாலம் அன்பழகன், பிரசுதீஸ்வரன், ஆண்டாள் பிரியதர்ஷினி, செந்தில் வேல் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த பேச்சாளர்களை தேர்வு செய்தனர். கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மேற்பார்வையாளராக கலந்து கொண்டார்.

இந்த போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையொப்பமிட்ட சான்றிதழை கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்.

இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாதன், மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் மு.ஜெயக்குமார் திருப்பூர் தெற்கு, ஈ.தங்கராஜ் திருப்பூர் வடக்கு, மாநகர அமைப்பாளர்கள் சு.முத்துக்குமார் திருப்பூர் வடக்கு, எம்.எஸ்.ஆர்.ராஜ் (எ) மணிகண்டபிரபு திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு மாவட்ட துணை அமைப்பளர்கள் த.சசிகுமார், ப.ரவிச்சந்திரன், செ.ராஜசேகர், மு.முகமது ஜினைத், சசிகுமார் (எ) த. ஞானசிகாமணி, ஈ.பாலசுப்பிரமணியம், உ.லிங்கேஸ்வரன், திருப்பூர் தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.கே.ரவிச்சந்திரன், வழக்கறிஞர் ச.யுவராஜ், த.ஆரோன் செல்வராஜ், ந.வீரகாளி வெங்கடேஷ், சா.கவியரசு, என். எஸ்.கே.சிவக்குமார், வடக்கு மாநகர துணை அமைப்பாளர்கள் ஆ.வஞ்சிமுத்து, த.சந்திரசேகர், ச.பாண்டிதுரை, அ.பார்த்திபன், நா.தியாகு, தெற்கு ம.அசோக்குமார், கா.சையது அபுதாஹிர், மு.விக்னேஷ்குமார்,

க.திருநாவுக்கரசு, கு.அரவிந்த், ர.தமிழரசு, திருப்பூர் தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் சந்திரசேகர் வெள்ள கோவில், துரை தமிழரசு மூலனூர், நகர கழக செயலாளர்கள் எஸ்.முருகானந்தம் தாராபுரம், சபரி எஸ். முருகானந்தம் வெள்ள கோவில், கிருஷ்ணமூர்த்தி திருமுருகன்பூண்டி, நகராட்சி தலைவர் குமார், ருத்ராவதி பேரூர் கழக செயலாளர் அன்பு,

வீரபாண்டி பகுதி கழக செயலாளர் கோவிந்தராஜ், மாநகராட்சி சுகாதாரக் குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன், வட்ட கழக செயலாளர் நேதாஜி கண்ணன் உள்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வார்டு கழக, கிளைக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

விழுப்புரம் மாவட்டம் – செஞ்சி ஒன்றியத்தில்

# அரசு பள்ளிகளில் விரைவில் இரவு காவலர்கள் நியமனம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!

செஞ்சி, ஆக. 22 - விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றாள்அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது வகுப்பறைகளுக்குச் சென்றஅமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாணவர்களிடத்தில் கற்றல் கற்பித்தல் திறன் குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடங்கள் புரியும் வகையிலும் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்து அவர்களுடைய கற்றல் கற்பித்தலை மேம்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து ஹை டெக் வகுப்பறைக்குச் சென்ற அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அங்கு மாணவர்களுக்கு ஆசிரியர் நடத்தும் பாடத்தை ஆய்வு மேற்கொண்டார்.

அப்போதுவகுப்பறையில்பாடம் நடத்திய பின் மாணவர்களிடத்தில்



பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாணவர்களுக்குபாடத்தில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக தயக்கமின்றி ஆசிரியர்கள் இடத்தில்சந்தேகங்களை கேட்டு அதை தெரிந்து கொண்டுபடித்து

அரசு நடத்தும் பொது தேர்வில் பங்கேற்று அனைவரும் சிறந்த மதிப்பெண் எடுக்க வேண்டும்,மாணவர்களிடத்தில் கேள்வி கேட்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் உயர்கல்வி படித்து அரசு துறைகளிலும் போட்டித் தேர்வு மூலமாகவும் பல்வேறு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் நடத்தும் நேர்முகத் தேர்வில் பங்கேற்று வேலைவாய்ப்புகளை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்துசெய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆட்சி மாற்றத்தின் பிறகு அதிகப்படியாக மாணவர்கள் அரசு பள்ளியை நோக்கி வருகின்றனர்.

அங்கன்வாடி மையத்திலிருந்து சுமார் 3 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் அப்படியே அரசு பள்ளியில் சேர்ந்து உள்ளனர் .கூடுதலாக மற்ற பள்ளியில் இருந்தும் மாணவர்கள் அரசு பள்ளியில் சேர்ந்துள்ளனர்.

தமிழ்ப் புதல்வன், புதுமைப்பெண் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்ததால் அரசு பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளது.

கடந்த காலத்தில் நிறைய மாணவர்கள் சேர்க்கை மட்டுமேஎன்பது பெருமை கிடையாது அந்த மாணவர்களுக்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கிக் கொடுப்பது அரசின்கடமை என தெரிவித்தஅமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விரைவில் பள்ளிகளில் பற்றாக்குறையாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புவதற்கும் அரசு பள்ளிகளில் இரவு காவலர்கள் நியமனம் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

முன்னதாக பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு ஆகியோர் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். இதில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட பிரதிநிதி கதிரவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.